<u>சி.சி.எண். **111/2023**</u> அசா.**6** கலைசெல்வன் த/பெ. வேலாயுதம் தேதி **20.01.2026**

(1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

ஆடுகள் காணாமல்போன தகவலை சம்மட்டிவிடுதி காவல்நிலையத்திலிருந்து யார் தகவல் சொன்னார் என்றால் முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்யவில்லை, ஆறுமுகம் என்ற சிறப்பு உதவி ஆய்வாளர் மூலம் தகவல் கிடைத்தது. அவர் எந்த தேதியில் ஆடுகள் காணாமல்போனதாக புகார் பெற்றதாக தகவல் கூறினார் என்றால் 14.09.2022 அன்று கூறினார். மேற்படி தேதியிலிருந்து எத்தனை நாட்கள் கழித்து விசாரணைக்கு எந்த இடத்திற்கு சென்று வழக்கு சொத்துகளை கைப்பற்றினேன் என்றால் 24.11.2022 அன்று இச்சடி பேருந்து நிறுத்தம் அருகில் வழக்கு சொத்துகளை கைப்பற்றினேன். அங்கு யார் முன்னிலையில் என்னென்ன கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகஜரில் சொல்லியுள்ளேன் என்றால் சாட்சிகள் ராமசுப்பிரமணியன், சரத்குமார் ஆகியோர் முன்னிலையில் சில்வர் கலர் TN 67 BC 2696 என்ற பதிவெண் கொண்ட சிப்ட் டிசையர் கார் ஒன்று, TN 10 Y 3137 என்ற பதிவெண் கொண்ட யுனோவா சில்வர் கலர் கார் ஒன்று, 40 வெள்ளாடுகள் ஆகியவற்றை கைப்பற்றினேன்.

2. நான் குறிப்பிட்டதுபோல் 40 வெள்ளாடுகளை கைப்பற்றவில்லை என்றும், 48 வெள்ளாடுகளை கைப்பற்றியதாக கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் 48 வெள்ளாடுகளை கைப்பற்றிவிட்டு 40 வெள்ளாடுகள் என்று தவறுதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 48 வெள்ளாடுகளில் 26 ஆடுகளை மட்டும் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றும், அதற்கான காரணத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துகளை கைப்பற்றியதாக கூறப்படும் நேரத்தில் உடன் இருந்ததாக கூறப்படும் நபர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று எனது விசாரணையில் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் மற்றொரு சம்மட்டிவிடுதி காவல்நிலைய ஆடு காணாமல்போன வழக்கில் புகார்தாரர்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த நபர் நான்தான் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் நான் காவல்நிலையத்தில் இருந்தபோது அவர்களிடம் கையொப்பம் பெற்றேன் என்றாலும், மேற்படி சாட்சிகள் வழக்கு சொத்துகளை கைப்பற்றிய இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளை எந்த இடத்தில் கைது செய்தேன் என்ற விவரத்தை எனது புலன்விசாரணை ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, இச்சுடி பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்தேன். மேற்படி பேருந்து நிறுத்தத்தில் எதிரிகளை கைது செய்தபோது சாட்சிகள் சரத்குமார், ராமசுப்ரமணியன் உடன் இருந்தார்கள் என்ற விவரத்தை எனது வழக்கு கோப்புகளின் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகளிடமிருந்து எந்த வாகனத்தையும், ஆடுகளையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. அனைத்து ஆவணங்களையும் சரத்குமார், ராமசுப்ரமணியன் இருவரையும் காவல்நிலையத்திற்கு வரவழைத்து அவர்களிடம் கையொப்பம் பெற்று எனது மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது.

(ஒம்/-எஸ்.சக்திநாராயணமூர்த்தி)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
ஆலங்குடி(பொறுப்பு).